# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2026 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க,
## ஏற்றுமதிக் கமத்தொழில் ஊக்குவிப்பு
## (திருத்தச்) சட்டம்

---

**[2026 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 06 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]**

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

2026, ஒற்றோபர் மாதம் 09 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 20.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

இச்சட்டத்தை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

## 2026 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, ஏற்றுமதிக் கமத்தொழில் ஊக்குவிப்பு (திருத்தச்) சட்டம்

[2026 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 06 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச.வ. - ஓ. 57/2025

## 1992 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, ஏற்றுமதிக் கமத்தொழில் ஊக்குவிப்புச் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

**1.** இச்சட்டம், 2026 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, ஏற்றுமதிக் கமத்தொழில் ஊக்குவிப்பு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்

**2.** (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1992 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, ஏற்றுமதிக் கமத்தொழில் ஊக்குவிப்புச் சட்டம், "பணிப்பாளர்" என்னும் சொல் முதன்மைச் சட்டவாக்கத்தில் காணப்படும் இடங்களிலெல்லாம் அதற்கு பதிலாக "பணிப்பாளர் தலைமையதிபதி" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத் தாற்றிருத்தப்படுகின்றது. 1992 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்கச் சட்டத்துக்கான பொதுவான திருத்தம்

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவை திருத்துதல்

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "பிரதிப் பணிப்பாளர்கள் உதவிப் பணிப்பாளர்கள்" எனும் சொற்களுக்குப் பதிலாக "மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதிகள், பணிப் பாளர்கள், பிரதிப் பணிப்பாளர்கள் மற்றும் உதவிப் பணிப்பாளர்கள்" என்னும் சொற்களை இடுவதன்மூலம்; அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில்,"பிரதிப் பணிப்பாளரை அல்லது உதவிப் பணிப்பாளரை" எனும் சொற்களுக்குப் பதிலாக "மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதியை, பணிப் பாளரை, பிரதிப் பணிப்பாளரை அல்லது உதவிப் பணிப்பாளரை" என்னும் சொற்களை இடுவதன்மூலம்.

PL 15895 - 563 (2026/08)

முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "பிரதிப் பணிப்பாளரும் அல்லது உதவிப் பணிப்பாளரும்" எனும் சொற்களுக்கு பதிலாக "மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதியும் பணிப்பாளரும் பிரதிப் பணிப்பாளரும் அல்லது உதவிப் பணிப்பாளரும்" என்னும் சொற்களை இடுவதன்மூலம்; அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "பிரதிப் பணிப்பாளர் ஒவ்வொருவரும் அல்லது உதவிப் பணிப்பாளர் ஒவ்வொருவரும்" எனும் சொற்களுக்குப் பதிலாக "மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதி ஒவ்வொருவரும், பணிப்பாளர் ஒவ்வொருவரும், பிரதிப் பணிப்பாளர் ஒவ் வொருவரும் அல்லது உதவிப் பணிப்பாளர் ஒவ் வொருவரும்" என்னும் சொற்களை இடுவதன் மூலம்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவைத் திருத்துதல்

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவு "ஏற்றுமதிக் கமத்தொழில் பயிர்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்துக்குப் பதிலாக பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலம் இத் தாற்றிருத்தப்படுகின்றது:-

""ஏற்றுமதிக் கமத்தொழில் பயிர்" என்பது நெல், காய்கறிவகைகள், பழங்கள், வேர்ப்பயிர்கள் மற்றும் உணவுப் பயிர்களின் வகுதியைச் சேர்ந்த மேலதிக உணவுப் பயிர்கள் தவிர்ந்த உள்நாட்டு நுகர்வுக்கு மேலதிகமாக ஏற்றுமதி சாத்தியப்பாடொன்றைக் கொண்ட பயிரொன்றாக அடையாளப்படுத்தப்பட்டதும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரினால் இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் "ஓர் அறிவிக்கப்பட்ட கமத்தொழிற் பயிர்" ஒன்றாக வெளிப்படுத்தப்பட்டதும் அத்துடன் பெருந்தோட்டப் பயிரொன்றாக அடையாளப் படுத்தப்பட்ட ஏதேனும் பயிரை உள்ள டக்காததுமான ஏதேனும் பயிர் எனப் பொருள் படும்;".

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**6.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை ‘‘பிரகாசன பியச”, அரசாங்க அச்சுத் திணைக்களம்,
இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.